ஓம்


# புத்தகங்கள் மின்னாக்கம்.

சில காலம் முன்னே பழைய புத்தகம் ஒன்று கிடைத்தது. 8 பகுதிகளாக வெளியிடப்பட்டு இருந்தது. அந்த தொகுதி முழுதும் சேகரிக்க பல காலம் முயன்றும் கிடைக்காமல் இருந்தது. அவை பதிப்பில் இல்லை. திடீரென்று அத்தனையும் கிடைத்தன. அப்போது இவற்றை பாதுகாத்து வைக்க எண்ணம் வந்தது.
பழைய புத்தகங்களை எப்படி பாதுகாப்பது என்று ஆராய்ச்சி செய்ததில் அவற்றை digitise செய்வதே நல்லது என தோன்றியது.
கூகுளாரை உதவிக்கு அழைத்தேன். பல விஷயங்கள் கிடைத்தன.
http://www.4digitalbooks.com/
http://www.digitise-it.com/services/bookscan.html

ஒரு நல்ல பக்கததில கிடச்சத இங்க பாருங்க.
பிரித்த புத்தக வடிவிலே ஒரு பீடம். V வடிவில். அதே வடிவில் ஒரு சட்டத்தில் கண்ணாடி மூடி. பீடம் பக்கவாட்டில் நகரலாம். கண்ணாடி சட்டம் மேலும் கீழும் நகரும். புத்தகத்தை பீடத்தில் வைத்துக்கொண்டு கண்ணாடி சட்டத்தை அதன் மேல் இறக்க வேண்டும். சட்டம் வல இட பக்கவாட்டில் நகராது. அதனால் தேவையானால் புத்தகம் நகரும். பக்கவாட்டில் இரண்டு நிலையான காமிராக்கள். கணினி மென்பொருளால் இயங்கும். வெளிச்சம் தர விளக்கு மேலே உண்டு.
நாம் செய்ய வேண்டியது புத்தகத்தை ஏற்றி சட்டத்தை அதன் மீது இறக்கி கணிணி சொடுக்கியை சொடுக்க வேண்டியதுதான். வலது இடது பக்கங்கள் படம் பிடிக்கப்படும். பக்கங்கள் திரும்ப திரும்ப புத்தகம் வலது பக்கவாட்டில் நகர்ந்து கொடுக்கும். அதனால் அது நடுவிலேயே இருக்கும். புத்தகம் சற்று மடங்கி இருப்பதாலும் கனமான கண்ணாடி அதன் மீது உட்காருவதாலும் பக்கம் படிந்தே இருக்கும். தரையில் கிடத்தினால் நடுபாகம் தூக்கிக்கொண்டு இருக்கும். படம் சரியாக போகஸ் ஆகாது. அப்படி எடுத்தாலும் எழுத்துக்கள் கோணலாக இருக்கும்.
நல்ல செட் அப்தான். வாங்கப்போனால் கட்டுபடி ஆகாதே. இருந்தாலும் இதை ஆராய்ச்சி செய்ததில் சில விஷயங்கள் புரிந்தன.

கிடைத்த பழைய காமிராவுடன் சில சோதனைகள் செய்தேன். இன்னும் சிலது புரிந்தது. காமிரா தூரத்தில் இருந்தால்தான் புத்தகத்தின் நடு பகுதியும் ஓரமும் போகஸ் ஆகும். ஏன் என்பதை படத்தில் பாருங்கள்.

தூரம் போனால் பக்கம் சிறியதாகதான் பதிவாகும். அதனால தேவையான தூரம் பின்னால் போய் ஜூம் செய்ய வேண்டும். காமிராவின் மேக்ரோ மோட் இதற்கு உதவும்.



6 பாயிரம்

வில்லை. அஞ்ஞான தசையில் பதிக்கு வேறாயிருக்கும் சிவனாகிய ஆன்மா ஞானநிலையில் பதியோடு இரண்டற்ற நிலையை யடைகிறது. அப்படிக்கின்றி என்றுமே சிவம் வேறு சீவன் வேறாகவே யிருக்குமென்று கருதல் தவறேயாகும். என்றும் வேறாயின் இரண்டாகிய நிலையில் முத்தி எவ்வாறு கூடும்? பிறவி எவ்வாறொழியும்? என்று மில்லை. கைவல்லியம் ஞானத்தைப் போதிக்க வந்த நூலாதலின் சரியை கிரியையாதிகள் அதில் கூறப்படவில்லை. தாயுமானவரும், "எனக்கினிச் சரியையாதிகள் போதும், யாதொன்று பாவிக்க நான் அதுவாதலா லுன்னை நானென்று பாவிக்கினத்துவித மார்க்க முறலாம்" என்று கூறியருளினர். இது சிவோகம் பாவனையையே குறிக்கிறது. தானற்றபின் இருப்பது ஒன்றே யாதலால் "தானென தன்மயமே யல்லாலொன்றைத் தலையெடுக்க வொட்டாது........" என்றும், 'தாக்கு நால்லானந்த சோதி, அணு-தன்னிற் சிறியவெனைத் தன்னருளாற், போக்கு வரவற்றிருக்கும் - சுத்த, பூரணமாக்கினன் புதுமைகாண் மின்னே" என்றும் அருளினர்.

இரண்டு கொள்கைகளின் கருத்தும் அநுபவமும் ஒன்றேயன்றி எள்ளளவும் பேதமில்லையென்றே மகான்களாகிய அநுபவஞானிகள் அருளியிருக்க, அதை யுணராமலே துவேஷ புத்திகொண்டு குற்றங் கூறுவது நூலுணர்வை மட்டும் கிரகித்துக்கொண்டு உண்மையை யறிய ஆராய்ச்சி செய்யாதார் தன்மையேயாகும்.


இத்தகையோர்களது தவறான மொழிகளைக் கேட்கும் சிலர் வேதாந்தமே அப்படித்தான் கூறுகிறதாக்கும் என்ற தப்பு அபிப்பிராயங்கொண்டு கைவல்லிய நூலின் மேல் விருப்பங்கொள்ளத் தடுமாற்ற முறுகிறார்கள். இக்காரணத்தால்தான் நாம் முகவுரையாய் இவ்விஷயத்தைக் கூற வேண்டியதாயிற்று.

பாயிரம் 7

இந் நூல் எல்லா சாதனங்களும் கைவந்தபின் தன்னை யறிந்து தலைவனில் இரண்டறக் கலக்கவேண்டியதைப் பற்றி மட்டுமே போதிப்பதால் இது எம் மதத்தினரும் எவ்வருணத்தாரும் வாசித்துணர்ந்து பயனடையத்தக்க போத நூலா யிருக்கிறது. இத்தகைய அருமைவாய்ந்த நூல் பாக்களாய் எழுதப்பட்டிருக்கிறது. இதற்கு இதுகாறும் நான்கைந்து உரைகள் எழுதப்பட்டிருப்பதாய்த் தெரிகிறது. ஆயினும் கடைசியாக பூலோக கயிலாய மென்னும் சிதம்பர க்ஷேத்திரத்தி லெழுந்தருளியிருந்த மகானாகிய கோவிலூர் ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் எழுதியருளிய தத்துவார்த்த தீபம் என்னும் உரையே மிகச் சிறந்ததென்று யாவராலும் மதிக்கப்படுகிறது. இத்தகைய உரைகளிருந்தும், இந் நூல் இலக்கண விலக்கிய வாராய்ச்சி கொஞ்சமேனும் உடையோர் மட்டுமே வாசித்துணரத் தக்கதா யிருக்கிறது. ஆதலின் யாவரும் சுலபமாய் வாசித்துணரும் வண்ணம் இது வசன நடையில் எழுதப்பட வேண்டியது அவசியமே. அவ்வாறே இரண்டொரு வசனங்களும் எழுதப்பட்டிருப்பதாய்க் கேள்வி. ஆயினும் சுருக்கமாகவும், முக்கியமான விஷயங்களை விளக்கிக் காட்டியும், ஆண் பெண் இரு பாலாரும் சுலபமாய் வாசித் தறிந்து கொள்ளும் வண்ணம் எளிய நடையில் வசன ரூபமாக வெளியிட வேண்டுமென பலர் விரும்பியபடியால் இதை யெழுத நேர்ந்தது.

பரம தயாநிதியாகிய பரசிவமே அடியேன் சிற்றறிவிற்குத் துணைநின்று உண்மைக்கு மாறுபடாவண்ணம் வழிகாட்டியா யிருந்து, இதை இனிது முடியுமாறு அருள்புரியவேண்டும் என்ற பிரார்த்தனையோடு இதை எழுதத் தொடங்குகிறோம். பிழைகளுளவேல் ஆன்றோர் பொறுக்கப் பிரார்த்திக்கிறோம்.

புத்தகத்தை பொருத்த வரை காமிரா கிட்டே இருக்கும் போது லென்ஸுக்கும் பேப்பருக்கும் இருக்கிற தூரம் நடுவிலும் ஓரங்களிலும் வேறுபடும். தூரம் போக போக இந்த வேறுபாடு குறைவு. அதனால ஃபோகஸ் சரியா இருக்கும். ஆனா படம் எடுக்கிற பரப்பு அதிகமாகும். அதை குறைக்கதான் ஜூம் செய்யணும்.



இதெல்லாம் புரிந்த பிறகு என்ன காமிரா வாங்கலாம் என்று யோசிக்கலானேன்.
PIT உதவி தேவைன்னு ஒரு மடல் போட்டேன்.

பழைய ஆவணங்களை/ புத்தகங்களை மின்னாக்க...
I would suggest flatbed scanner - ( hp ?) if the book is not in good condition to scan, we probably can use any point and shoot camera fixed in tripod and with proper lighting setting. Anything which can handle clear close up shot like canon powershot sd1000 / sd1100

or similar conf could take care of this issue. Taking in higher resolution with very good lighting condition is important. ....
try
Canon PowerShot SX100 IS
Canon PowerShot G9
Canon PowerShot A720 IS

**these models are good for the work you wanna do**

...ண்ணு பதில் வந்தது.
[எல்லா விஷயங்களிலும் ஜீவாதான் வழிகாட்டினார். அவருக்கு நன்றிகள் பல.]
இந்த மின் வருடலில் சில பிரச்சினைகள். வெறும் தனி காகிதமானா பிரச்சினை இல்லை. புத்தகம் மெலீசா இருந்தாலும் பி.இ.
புத்தகம் கொஞ்சம் தடிமனா போனாலும் நடு பாகம் தூக்கிக்கொண்டு விடும், படியாது.
அப்புறம் வலது இடது பக்கங்களை தனித்தனியா ஸ்கேன் செய்யனும். அப்பவும் சரி வரலை.

சரி அப்ப போட்டோ பிடிக்கிறதுதான் ஒரே வழின்னு முடிவு செய்தேன்.
காமிரா விலையும் ஒரு நிர்ணயம் செய்கிற விஷயம் ஆகி விட்டது.
மேக்ரோ மோட், அதிக ஆப்டிகல் ஜூம், அதிக கொள்ளவு நினைவகம்.
ஒரு பத்தாயிரம் விலை அப்படின்னு முடிவு பண்ணேன்.


காமிரா விலை விசாரிச்சா மயக்கம் வந்தது. பரிந்துரை செய்ததெல்லாம் பாத்தா விலை எங்கேயோ போச்சு.
மேலே விசாரிச்சதுல இன்னும் இதுக்கு சுங்க வரி அதிகமா இருக்கிறதால விலை

அதிகம்தான்னு சொன்னாங்க.  க்ரே மார்கெட்ல வாங்க பயமா இருந்தது. பிறகு வலைல தேட ஆரம்பிச்சேன்.

இந்தியா ப்ளாஸால ஆபர் இருந்தது. பரவாயில்லயேன்னு இருந்ததை குறிச்சுகிட்டு ஜீவாக்கு திருப்பி மின்னஞ்சல் அனுப்பினேன். பவர்ஷாட் SX 100 IS பரவாயில்லைன்னு தெரிஞ்சதும் ஆர்டர் பண்ணினேன். அது பதிவானப்ப விலை இன்னும் குறைவா பதி மூனாயிரத்துக்கு வந்தது பாத்து ஒரே சந்தோஷம். சந்தோஷம் கொஞ்ச நாள்தான் இருக்கும்னு அப்ப தெரியலை.

காமிராவும் வந்து சேந்தாச்சு. ஆஹான்னு அத தூக்கிக்கொண்டு அமாவாஸை, பௌர்ணமி எல்லாம் படம் பிடிச்ச திருப்தியோட வேலைல இறங்கினேன்.
காமிரா வாங்கும் போதே அதுக்கு முக்காலி பத்தி விவாதிச்சோம். ஜீவா சுலபமா ஒரு அட்டை டப்பாவை பயன் படுத்துவது குறிச்சு படமே போட்டு அனுப்பினார்.


இதுக்கெல்லாம் நடுல என் அண்ணாவிடமிருந்து ஒரு நூலகமே வந்து சேந்தது. நிறைய புத்தகங்கள்;  அதெல்லாம்  அட்டை டப்பாக்கள்ல வந்தது. அதில ஒரு டப்பாவை எடுத்து பக்கங்கள்ல தைரியம் இருந்த வரை பெரிசா சாளரம் வெட்டினேன். பட்டர் பேப்பர் ஆல மூடி வெச்சு குண்டுசியால நிறுத்தினேன். மேலெ லென்ஸ் அமைப்பு உள்ளே போகிற மாதிரி ஒரு சதுர ஓட்டை வெட்டினேன். ஏன் சதுரம்? அது வெட்ட சுலபம்.
வீட்டில இருந்த மேசை விளக்கு வெளிச்சம் பத்தலை. ப்ளாஷை பயன் படுத்துன்னு புத்தி சொன்னது காமிரா.



(படங்களை எல்லாம் சின்னதாக்கி போட்டு இருக்கேன்; அதனால் என்னடா தெளிவா இல்லையேன்னு நினைக்க வேண்டாம்)
அதிரடியா மே.வி லிருந்து ப்ளக் கம்பி ஸ்விட்ச் எல்லாம் தனியா பிரிச்சேன். வராண்டா சிஎஃப்எல் விளக்கை கழட்டி பொருத்தியாச்சு. அப்புறம் அதுவும் போதாம அதே மாதிரி இன்னும் ஒண்ணு தயார் பண்ணிட்டேன்.

இன்னும் எப்படி வெளிச்சத்தை அதிகப்படுத்தலாம்னு யோசிக்கலானேன். வெள்ளை சார்ட் பேப்பர் வாங்கி டப்பா உள்ளே குண்டுசியால பொருத்தியாச்சு. இப்ப டப்பா உள்பக்கம் ஆலா போட்டு வெளுத்த மாதிரி வெள்ள வெளேர்ன்னு ஆயிடுச்சு.
இப்ப இதெல்லாம் எழுதிக்க வேண்டாம். கடைசில சுருக்கமா தரேன்.

சரி உள்ள புத்தகத்தை வெச்சாச்சு. அது மேல ஒரு அஞ்சு மி.மீ கண்ணாடி. இது காகிதம் சுருண்டுகாம இருக்க. அதே சமயம் புத்தகத்தோட நடு பாகம் தூக்கிக்காம இருக்க இதோட கனம் உதவும்.





புத்தகத்தின் இடது அட்டை கீழ மெலிசா ஒரு புத்தகம் ஒரு அட்டை அதான் முன்னேயே வெட்டினோமே. அதெல்லாம் வெச்சாச்சு. இப்ப வலது இடது பக்கங்கள் ஒரே மட்டமாயிட்டது.

காமிராவை ஆன் பண்ணிட்டேன். மேக்ரோ, ஆட்டோ அமைச்சாச்சு.

இப்ப எனக்கும் காமிராவுக்கும் சடுகுடு ஆரம்பிச்சது. கையால ஃபோகஸ் பண்ணறதே சுலபமா இருந்திருக்கும். லீவரை இழுக்கக்கொள்ள ஒண்ணு ஒரேயடியா கிட்ட போயிடும். இல்லை ஒரேயடியா தூர போயிடும். மூச்ச பிடிச்சுகிட்டு ஆடி ஒரு வழியா புத்தகம் முழுக்க திரையில தெரிய வெச்சாச்சு.

இரண்டு விளக்குகளையும் எரியவிட்டு பாதி க்ளிக் - ஃபோகஸ், முழு க்ளிக் - அப்பாடா படம் எடுத்தாச்சு.

புத்தகம் பழசா ஜம்னு பழுப்பு நிறத்தில படம்!



ஸ்ம்ருதியிருப்பதால், மேல் திதியின் ஸம்பந்தம் விசேஷிக்கப்பட்டுள்ளது,

ஸ்காந்தபுராணத்தில்:—ஷஷ்டீ, ஏகாதசீ, அமாவாஸ்யா இம்மூன்றும் முன் திதியுடன் கூடியிருந்தாலும், அஷ்டமீ, ஸப்தமீ இவ்விரண்டும் அடுத்த திதியுடன் கூடியிருந்தாலும் இவ்வைந்து திதிகளும் உபவாஸத்துக்கு அர்ஹங்களல்ல.

முன் திதி ஸம்பந்தமுள்ள ஸப்தமீ கிடைக்காவிடில், அடுத்த திதியுடன் கூடிய ஸப்தமீ க்ராஹ்யமாகும். அது சொல்லப்பட்டுள்ளது,

காலநிர்ணயத்தில்:—எல்லா ஸப்தமீ வ்ரதங்களிலும் ஷஷ்டியுடன் கூடிய ஸப்தமியே க்ராஹ்யமாகும். அவ்விதம் கிடைக்காவிடில் அடுத்த திதியுடன் கூடியதையும் க்ரஹிக்கவேண்டும்.

அஷ்டமீ நிர்ணயம்.

இனி அஷ்டமீ நிர்ணயிக்கப்படுகிறது. அதில் சுக்லபக்ஷ அஷ்டமீ நவமியுடன் கூடியது க்ராஹ்யமாகும். அவ்விதமே,

நிகமத்தில்:— சுக்லபக்ஷ அஷ்டமீ, சுக்லபக்ஷ சதுர்த்தசீ இவைகள் முன் திதியுடன் கூடியதானால் க்ராஹ்யங்களல்ல.

அடுத்த திதியுடன் கூடியவைகளே க்ராஹ்யங்களாகும்; உபவாஸம் முதலிய காரியங்களில். இது ஸநாதன தர்மமாகும்.

ஸ்காந்தத்திலும்:—அஷ்டமீ நவமியுடன் கூடியதாகில் அதை ஸம்பத்தை விரும்புகிறவன் அனுஷ்டிக்கவேண்டும். ஓ ஸப்ராஹ்மண்ய ! ஸப்தமியுடன் கூடிய அஷ்டமியை க்ரஹிக்கக்கூடாது.

க்ருஷ்ண பக்ஷத்தில் ஸப்தமியுடன் கூடிய அஷ்டமியை க்ரஹிக்கவேண்டும் என்பதும், நவமியுடன் கூடியதைத் தள்ள வேண்டுமென்பதும் சொல்லப்பட்டுள்ளன.

நிகமத்தில்:— க்ருஷ்ணபக்ஷ அஷ்டமீ, க்ருஷ்ணபக்ஷ சதுர்த்தசீ இவைகள் முன் திதியுடன் கூடியிருந்தால் க்ராஹ்யங்களாகும், அடுத்த திதியுடன் கூடியதாகில் க்ராஹ்யங்களல்ல; உபவாஸம் முதலிய கார்யங்களில். இது ஸநாதன தர்மமாகும்.

மற்ற வ்ரதங்களில் ஆங்காங்கு சொல்லியதைப் பார்த்துக் கொள்ளவேண்டும். அவ்விதமே தூர்வாஷ்டமீ என்ற ஓர் வ்ரதத்தின் விஷயத்தில்,

பவிஷ்யத் புராணத்தில்:— "ச்ராவண பூர்ணிமா, தூர்க்கா நவமீ, தூர்வாஷ்டமீ இவைகள் முன் திதியுடன் கூடியவைகளே க்ராஹ்யங்களாகும். சிவராத்ரி, பலிதினம் இவைகளும் அப்படியே" என்று.

கணினிய தட்டி எழுப்பினேன். பிக்காஸாவ கூப்பிட்டு படத்த எல்லாம் இறக்கிகோப்பான்னேன். அதுவும் சமத்தா செஞ்சிடுத்து. எனக்கு நிறம் வேண்டாம். நிற வெறி தப்புங்கிறாங்க. நீ கருப்பு வெள்ளை ஆக்குன்னேன். அதுவும் ஆச்சு. பிறகு பக்கத்தில தெரிஞ்ச கொஞ்ச நஞ்ச கூடுதல் இடத்தை எல்லாம் வெட்டி சீராக்கினேன்.

சரியாதானே வருது. அப்புறம் என்ன புத்தக மின்னாக்கம் ஆரம்பிக்கலாம்ன்னு ஆரம்பிச்சேன்.

சங்கர விஜயம்ன்னு ஒரு சின்ன புத்தகம் அகப்பட்டதா, சரி, சோதனை ஓட்டத்துக்கு இது சரி படும்ன்னு நினச்சு அதை வெச்சு வேலை ஆரம்பிச்சுட்டேன்.


திருப்பி சடுகுடு எல்லாம் ஆடி முடிச்சு முதல் பக்கம் கிளிக், இரண்டாவது... இப்ப சில விஷயங்கள் புரிஞ்சது. உக்காந்து உக்காந்து எழுந்திருக்க முடியலை. டப்பா முன்னாலே முட்டி போட்டு kneel பண்ணி பக்கத்தை திருப்பறது. அப்படியே உடலை மட்டும் உயர்த்தி ஃபோகஸ், க்ளிக். இது மாதிரி பத்து பக்கம் செய்யறத்துக்குள்ள முட்டி வலிக்க ஆரம்பிச்சாச்சு. தொடை இரண்டும் "தோ, நாங்களும் இருக்கோம்"ன்னு சொல்லிச்சுங்க. இது வரைக்கும் இருந்ததா தெரியாத தசை எல்லாம் இப்ப தெரிய வந்தன. இது என்னடா ஸ்கூல்ல கூட நாம முட்டி போடலையே, இப்ப இப்படி ஒரு கஷ்டமா? ம்ம், தமிழுக்கு இந்த தொண்டு கூட செய்யலேன்னா எப்படி. பரவாயில்லை, அப்புறமா நமக்கு நாமே திட்டத்துல தியாகி பட்டம் கொடுத்துக்கலாம்ன்னு பொறுத்துக்கிட்டேன். கிறிஸ்துவர்கள் முஸ்லிம்கள் இந்த வேலையை சுலபமா செய்வாங்கன்னும் நினைப்பு வந்தது.



கால் முட்டிக்கு இதமா ஒரு தலைகாணியை வெச்சுகிட்டு வேலையை தொடர பாத்தா காமிரா தானா ஆப் ஆகியிருந்தது. லென்ஸ் உள்ளே போச்சே! திருப்பி சடுகுடு. ஒட்டிகிட்டு இருந்த பக்கங்களை எல்லாம் திருப்ப கஷ்டப்படலிங்க. அதான் வேர்வை கொட்டோ கொட்டுன்னு கொட்டுதே! அப்பப்ப சும்மா நெத்திய தொட்டுகிட்டா போதும். இன்னும் கொஞ்சம் செய்யலாம், இன்னும் கொஞ்சம்ன்னு நினைச்சு வலி எல்லாம் பொருட்படுத்தாம செய்ய செய்ய திடீர்ன்னு கடைசி பக்கம் வந்துடுச்சு!

"அட நாம நினைச்சதவிட சீக்கிரமே முடிஞ்சுடுத்தே!" ன்னு எனக்கு நானே ஒரு சபாஷ் போட்டுகிட்டு கணினியை தட்டினேன். முன்னே சொன்னது போல எல்லாம் செய்து முடிச்சு, எப்படி வந்து இருக்குன்னு பாத்தேன். இன்னும் வெளிச்சம் கூட தெரிஞ்சா பரவாயில்லையேன்னு தோணிச்சு. பிக்காஸால பல சேஷ்டைகள் எல்லம் செய்துவிட்டு அப்புறமா அதுக்கே என்ன செய்யணும்னு நல்லா தெரியும்ன்னு ஞானோதயம் வந்தது. "i am feeling lucky" பொத்தானை தட்டினா எல்ல படங்களையுமே நல்லா ஆக்கி கொடுத்துச்சி.

கடைசில பழுப்பு காகித பக்கம் எப்படி வந்ததுன்னு படத்தை பாருங்க. ஒரு பகுதியை மட்டும் வெட்டி போட்டு இருக்கேன்.



அப்புறம் என்ன! அடுத்த நாள் வேலை ஆரம்பிக்கலாம்ன்னு நினச்சா கால், தொடை, முதுகு எல்லாம் கெஞ்சுதுங்க.

போனாப்போறதுன்னு மூணு நாள் ஓய்வு கொடுத்து திருப்பி வேலை ஆரம்பிசுட்டேன். சுமார் 300 பக்கங்கள் போட்டோ எடுத்தப்பின் மின்கலம் காலின்னு செய்தி வந்திச்சு. அவ்ளோதானே சார்ஜ் பண்ணலாம்ன்னு பாத்தா uniross x-press charger சார்ஜ் செய்ய 16 ½ மணி நேரம் போதும்ன்னு சொல்லிச்சு.

இதென்னடா எக்ஸ்பிரஸ்? லாலு ரயில்வே பாஸ்ட் பாஸஞ்ஜர் எல்லாத்தையும் சூப்பர்

ஃபாஸ்ட் ஆக்கின மாதிரின்னு நினைச்சுகிட்டு படங்களை எடிட் பண்ண போயிட்டேன்.

அப்புறமா இதை சரியா ஒழுங்கு பண்ணிகிட்டேன். மதிய நேரம் படம் எடுக்கிறது. சாயந்திரம் சார்ஜ் போட்டா அடுத்த நாள் தயார். இது வேலைய கெடுக்குதோன்னு தோணிச்சு. ஒரு ac adapter வாங்கி போட்டுடலாமான்னு யோசிச்சு நண்பருக்கு போன் போட்டேன். அவர் விசாரிச்சுட்டு "ஓ, கிடைக்குதே, 2600 ரூபாய்தான் விலை" ன்னு சொன்னார். இது என்னடாது, சொத்தில பாதி கேப்பாங்க போல் இருக்கு! சரிப்படாது; ஒரு மின்கலம் ஆயிரம் தரம் சார்ஜ் பண்ணலாங்கிறான். (ஒரு தரம் சார்ஜ் பண்ணா ஆயிரம் தரம் பண்ணா மாதிரின்னு சொல்லலையே! எவ்ளோ நல்லா இருக்கும்.) அப்ப ஒரு ரெண்டரை வருஷம் ஓட்டிடலாம். அப்புறம் பிழைத்து இருந்தா புதுசா 2 மின்கலம் வாங்கி போடலாம்ன்னு முடிவு பண்ணிட்டேன். சகாயமா கிடச்சா வாங்கி தரேன்ன்னு சொல்லி இருக்கார் நண்பர். பாக்கலாம்.

இப்படியே 4-5 நாள் வேலை நடந்தப்பறம் எடை குறைஞ்சு போச்சுங்க. புத்தகத்தோட எடை இல்லீங்க; கன்ஸ்யூமர் கௌன்ஸில்ன்னு ஆரம்பிக்காதீங்க. என் எடை குறைஞ்சு போச்சு. பரவாயில்லையே! எல்லா சக்கரை வியாதி ஆசாமி, அதிக எடை ஆசாமிக்கெல்லாம் இப்படி ஒரு வழி சொல்லிக்கொடுத்து காமிரா விலையை சரி கட்டிடலாம் போலிருக்கு. PIT நண்பர்களுக்கெல்லாம் இலவசமாயும் இங்கே வந்து படிக்கிறவங்களுக்கு 50% தள்ளுபடியும் தரலாம்ன்னு யோசனை. என்ன சொல்றீங்க?

மேலே யோசிச்சு யோசிச்சு சின்ன சின்ன மாற்றங்கள் பண்ணேன். தலைகாணியை தூக்கி போட்டுட்டு சின்ன பெஞ்ச் ஒண்ணை பெட்டி முன்னாலே வெச்சுகிட்டேன். இப்ப இடுப்பிலேந்து வளையரது ஒண்ணுதான் வேலை. என் முட்டிங்களுக்கு விடுதலை கிடைச்சிருச்சி.

குனிஞ்சு பக்கத்தை புரட்டி அப்படியே நிமிந்து முழுக்க பாக்காமலே க்ளிக். (பழகிடுச்சு! பழக்கத்துல உக்காந்த இடத்துலேந்தே சரியா இருக்கான்னு பாக்க முடியும்.)

தண்ணி நனைச்சுக்க ஒரு சின்ன கிண்ணம் வெச்சுகிட்டேன். மேலும் வெளிச்சம் தெரிய விளக்குங்க பக்கத்தில வழ வழ ஆர்ட் காகிதம் பொருத்திகிட்டேன் (படத்தை பாருங்க). காகிதம் எல்லாம் வாங்கலை. வீட்டுல இருந்த காலண்டரோட போன மாச பக்கங்கள்தான்! காமிரா சரியா படியாததால அது வந்த பெட்டில இருந்த தெர்மோகோலை வெட்டி குண்டுசி குத்தி வெச்சுகிட்டேன். பெட்டி மேல வெள்ளையா தெரியுதா?



--

சரி இப்ப எப்படி செய்கிறதுன்னு முறையா பாக்கலாம்.

ப்ராஜக்ட்: புத்தக மின்னாக்கம்.

தேவையானவை:

1. காமிரா: ஜூம் வசதி, 1-2 கிகா நினைவகம்; மேக்ரோ மோட்
2. புத்தகங்கள் :-))
3. ஒரு அட்டை பெட்டி 1 ½ அடி அகலம், உயரம், 2 ½ அடி நீளம்.
4. கத்தி, குண்டுசிகள், வெள்ளை சார்ட் காகிதம்-2, பட்டர் பேப்பர்-2, க்ளாஸ் பேப்பர் (gloss) 2.
5. மின் விளக்குகள் 2. ப்ளக், கார்ட் த்ரூ மாற்றி -அதாங்க ஸ்விட்ச், ஹோல்டர் வைத்து நாமே செஞ்சுக்கலாம். படத்தை பாருங்க.
6. தாழ்வான ஒரு பெஞ்ச்/ முக்காலி
7. 5 மி.மீ*12 இன்ச்*12 இன்ச் தெளிவான கண்ணாடி. வாங்கறப்பவே ஓரத்தை மழுங்க வெச்சு வாங்குங்க. இல்லாட்டா விரல்களை வெட்டிடும்; அப்புறமா என் கிட்ட சண்டைக்கு வராதீங்க! எதுக்கும் ஓரங்களை டேப் வெச்சு ஒட்டலாம். அது பாதுகாப்பானது.
8. வெட்டிப்போட்ட அட்டைகள், ஒரு வாராந்தரி, ஒரு அட்டை போட்ட சிறு புத்தகம்.
9. ஒரு சின்ன கிண்ணம் தண்ணீர்/ ஈரமான "பாஞ்ஜி" அட நம்ம ஸ்பான்ஜ்தாங்க! பக்கங்களை திருப்ப விரலை ஈரம் செய்து கொள்ள.


10. நேரம்
11. உங்க அபிமான வலி நிவாரணி.

அட்டை பெட்டியை எடுத்து மூடும் பக்கம் உங்களை நோக்கி வைங்க. மூடிகளை திறங்க. பக்கவாட்டு மூடிகள், கீழ் மூடி இதெல்லாம் விலக்கி அப்படியே விட்டுடலாம். மேல் மூடியை வெட்டி எடுங்க.
பெட்டியோட வலது, இடது பக்கங்களில பெரிய சன்னல் வெட்டுங்க. கையோ விரலோ வெட்டிக்காம ஜாக்கிரதையா இருங்க. பெட்டியின் மேல் பக்கம் காமிரா முனை நுழையற அளவு ஓட்டை வெட்டி எடுங்க.
பக்க சன்னல்களை மறைச்சு உள் பக்கமா வெண்ணை தாள் (பட்டர் பேப்பர்) போட்டு குண்டுசியால பொருத்துங்க.
பெட்டியோட உள்பக்கங்கள்ல வெள்ளை சார்ட் தாள் குண்டுசிகளால பொருத்துங்க.
விளக்குகளை வெண்ணைத்தாளுக்கு வெளியே பொருத்துங்க. CFL னா சூடு பிரச்சினை அதிகம் இருக்காது. நான் எப்படி செஞ்சேன்னு படத்தில பாருங்க.



பெட்டி உள்ளே கீழே வாராந்திரியை வைச்சு அது மேல புத்தகத்தை வைங்க. முதல் பக்கம் திருப்பி வலது இடது பக்கங்கள் மட்டமா இருக்க சின்ன புத்தகத்தையோ, பெட்டியோட பக்கங்களை வெட்டி கிடைச்ச அட்டைகளையோ பயன்படுத்துங்க.
கண்ணடியை அது மேல வைத்து பக்கத்தை சுருக்கம் ஏதும் இல்லாம ஆக்குங்க.
காமிராவை எடுத்து பவர் ஆன் செய்து, ஆட்டோ, மேக்ரோ அமைச்சுக்குங்க.
பெட்டி மேலே உள்ள ஓட்டை வழியா உள்ளே விட்டு காமிராவை சரியா படிய வைங்க.

சரியா ஜூம் செய்யுங்க; ஃபோகஸ் பண்ணுங்க. அப்புறம் கிளிக். ஆச்சு.
குனிஞ்சு பக்கத்தை திருப்புங்க. இடுப்பிலிருந்து வளையணும். முதுகை வளைச்சா சீக்கிரமே முதுகு வலி வந்திடும்; என்னை திட்டாதீங்க.
கண்ணாடியை தூக்கி, பக்கதை திருப்பி, கண்ணாடியை மீண்டும் பொருத்துங்க.
இப்படியே பக்கம் பக்கமா படம் எடுக்க வேண்டியதுதான். 20-30 பக்கங்கள் எடுத்த பிறகு ஏதாவது சரி பண்ணனுமான்னு பாருங்க. வலது பக்கம் (உயரமா இருந்த) புத்தகத்தோட தடிமன் இப்ப குறைஞ்சுகிட்டே வரும். தகுந்தாப்போல அட்டையை எடுங்க.



எல்லா பக்கங்களும் முடிஞ்ச பிறகு கணினியில் எல்லாத்தையும் சரி செய்ய வேண்டியதுதான். (post production)

சுருக்கமா எழுதவேண்டி நிறைய விஷயங்களை மறைச்சுட்டேன். என் ஜீனியஸ் வெளிப்பட்ட விஷயங்களை அவையடக்கம் கருதியும் செஞ்ச தப்புகளை சுருக்கமா எழுத வேண்டிய நிர்பந்தத்தாலும் மறைச்சுட்டேன்னு தெரிவிச்சுகிறேன்!
எங்கே சின்ன பசங்க எல்லாம் ஜோரா கைதட்டுங்க!
பெரியவங்க எல்லாம் பெருந்தன்மையோட ஆசிகள் சொல்லி மேலும் எப்படி நல்லா செய்யலாம்ன்னு யோசனை சொல்லுங்க.
வரட்டா?